வருகிறார். ஆகவே இந்தப் பிரச்சினை இப்போது அரசினரின் கவனத்திலேயும் பொறியாளரின் தீவிர கவனத்திலேயும் இருந்து வருகிற காரணத்தினால் இதற்கு அவையின் பிற அலுவல்களின் ஒத்திவைப்புத்தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தின் காரணத்தினால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின 41 (3) விதியின் கீழ்" ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது" என்று உள்ள தடையை இன்று தளர்த்தவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

8. கவன ஈர்ப்பு

(i) கோவை மாவட்டத்தில் குடிநீர் கிடைக்காமை.

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,

கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை தவறிப் போய்விட்டமையால் பொது மக்கள் குறிப்பாக கிராமப்புறத்தில் குடியிருக்கும் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் துன்பப்படும் நிலை பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளுக்கு மேல் கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியது குறித்து அவ்வப்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக மாவட்டம் முழுவதிலும் நிலத்திற்கடியி லுள்ள நீர் மட்டம் கணிசமான அளவுக்குக் கீழே சென்றுவிட்டது. குடிநீர்க் கிணறுகள் பலவும் வற்றிவிட்டனவென்றும் அறிவிக்கப்பட்டது. எனவே, இக் கிணறுகள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருந்ததால் 1967–68-ஆம் ஆண்டில் அரசாங்கம் இம்மாவட்டத்துக்கு இதற்கென 22,12,500 ரூபாய் ஒதுக்கியது. ஹரிஜனக் குடியிருப்புகளில் உள்ள கிணறு களை ஆழப்படுத்துவதற்கு மேலும் 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. கிணறு வெட்டுவதற்குத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் மேற்சொன்ன நிதி ஒதுக்கததில் ரூ. 3 93 லட்சத்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பிக்கொடுத்துவிட்டார். எஞ்சிய தொகை பயன்படுத்தப்பட்டது. சீர்கேடான பருவ நிலையினால் பாதிக்கப் பட்ட கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளுவதற்காக, 1968-ம் ஆகஸ்டு முற்பகுதியில் கோவை மாவட்டத்திற்காக மேலும் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டது. கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் அரசாங்கத்தை வேண்டியுள்ளார். இக் கோரிக்கையை அரசு பரிவுடன் ஆய்வுசெய்து வருகின்றது. இந்த வேண்டு கோளைக் குறித்து அரசு விரைவில் தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருப்பதாக அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். அங்குள்ள கஷ்டத்தை நீக்க மாவட்ட ஆட்சித் தலைவரது கோரிக்கையை அரசாங்கம் விரைவில் ஆய்வு செய்து அவர் கோரியபடி அதிக நிதி ஒதுக்கித் தருவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆய்வு நடைபெற்று வருகிறது. விரைவாகவே அதுபற்றி முடிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறேன்.